பிரிவு 3 சகலகலாவல்லி மாலை

குமரகுருபரர் இயற்றிய பக்தி நூல்  சகலகலாவல்லி மாலை.

ஊமையாகப் பிறந்து, முருகன் அருளால் பேச்சுவரப் பெற்றவரும், தெய்வீக ஞானியாகத் திகழ்ந்தவருமான இவர், காசித் தலத்தில் தங்கியிருந்தபோது அவரது கனவில் இறைவன் கேதாரீஸ்வரர் தோன்றி, தாம் பல இடிபாடுகளுக்கிடையே புதைந்திருப்பதாய் கூறி அந்த இடத்தையும் காட்ட, மறுநாள் காலை குமரகுருபரர் தனது அடியவர்களுடன் சென்று, அந்த இடத்தைக் கண்டறிந்து, அதனைச் சீர் செய்யும் முயற்சிகளில் ஈடுபட்டார்.

அக்காலத்தில், முகலாய சாம்ராஜ்யத்தில், இந்துக்கள் கோயில் கட்டுவது இலகுவான விடயம் அல்ல.அதற்காக அரசனிடம், விசேட அனுமதியைப் பெற வேண்டியிருந்தது. தமிழ்மொழி மட்டுமே அறிந்திருந்த குமரகுருபரர், மன்னரின் உதவியைப்பெற்று, கோயிலைச் சீரமைக்க விரும்பினார். அதற்காக அரண்மனைக்குச் சென்றார்.ஆனால், அவரது எளிய தோற்றத்தைக் கண்டு, மன்னன் அவர் அமர்வதற்கு ஆசனம் கூட வழங்காது, உதாசீனம் செய்தான். குமரகுருபரர் தனது வேண்டுகோளை முன் வைத்தபோதும், மிக அலட்சியமாக, "நீங்கள் சொல்வது எனக்குப் புரியவில்லை. என் மொழியில் பேசினால் தான் நான் பதில் கூற முடியும்." என்று ஆணவத்துடன் பதில் அளித்தான். மிகுந்த மனவருத்தத்துடன் திரும்பினார் குமரகுருபரர்.மறு நாள் பொழுது புலர்ந்ததும், கங்கையில் நீராடி கலைவாணியை வேண்டி தியானம் செய்தார். தொடர்ந்து,

“**வெண்டாமரைக்கு அன்றி நின் பதம் தாங்க என் வெள்ளை உள்ளத் தண்டாமரைக்குத் தகாது கொலோ சகம் ஏழும் அளித்து உண்டான் உறங்க ஒழித்தான் பித்தாக உண்டாக்கும் வண்ணம் கண்டான் சுவைகொள் கரும்பே சகல கலாவல்லியே**.”

எனத்தொடங்கும்  'சகல கலா வல்லி மாலை'யைப் பாட கலைமகளின் அருளால் உடனடியாக ஹிந்துஸ்தானி மொழியின் வார்த்தைகளும் இலக்கணங்களும் முழுமையாக அறியப் பெற்றார். அம்பிகையைத் துதித்து அவளுடைய சிங்கவாகனத்தையும் பெற்று அதன் மீது அமர்ந்து மன்னனைக் காணப் புறப்பட்டார்.குமரகுருபரர் சிங்கத்தின் மீது அமர்ந்து வருவதைக் கண்ட மன்னன் அயர்ந்தான். அவர் ஒரு மகா ஞானி என்பதைப் புரிந்து பணிந்து வரவேற்றான். மன்னனிடம் குமரகுருபரர்  அவன் மொழியிலேயே உரையாடினார்.அவனும் அவர்  கேட்ட உதவிகளைச் செய்தான்.

சகலகலாவல்லி மாலை தமிழ் இலக்கியத்தில் பக்தி, கல்வி, கலை ஆகிய மூன்றையும் ஒன்றாக இணைக்கும் ஒரு சிறந்த படைப்பு. இப் பாடல்கள் மிகவும் இனிமையானவை. எளிமையான சொற்களில் இருந்தாலும் ஆழமான பொருள் கொண்டவை. சைவ மக்கள் அனைவரும், நவராத்திரி காலத்தில் இந்தப் பாடல்களைப்  பாராயணம் செய்வது வழமை. கவிதை நயமும், பக்தி உணர்ச்சியும் இணைந்திருப்பதால் இலக்கியப்பாரம்பரியத்தில் முக்கிய இடம் பெற்றிருக்கும் இந் நூலை நாமும் பாடிப் பயனுறுவோமாக.